**செய்தி வெளியீடு எண்.67** **நாள்.22.1.2010**

ஹஜ் 2009-லிருந்து பன்னாட்டு கடவுச் சீட்டுகளில் ஹஜ் விசா பெறுவது தவிர்க்க இயலாதது என்று சவூதி அரேபிய அரசு முடிவெடுத்துள்ளதென மும்பை, இந்திய ஹஜ் குழுவின் முதன்மைச் செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். இதனால் ஹஜ் 2010-ற்கு புனிதப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஒவ்வொருவரும் ஹஜ் 2010-ற்காக விண்ணப்பிக்கும்போது பன்னாட்டு கடவுச் சீட்டுகளை தங்களுடன் வைத்திருக்க வேண்டும்.

2. ஹஜ் 2010-ற்கு புனிதப் பயணம் மேற்கொள்ள விரும்பும் புனிதப் பயணிகள் தங்களிடம் பன்னாட்டு கடவுச் சீட்டு தற்போது இல்லாதிருப்பின் அதற்காக இப்போதே விண்ணப்பம் செய்து பன்னாட்டு கடவுச் சீட்டினை பெற்று மனுச் செய்ய தயாராக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஹஜ் 2010-ற்கான அறிவிப்பு பிப்ரவரி/மார்ச் மாதம் 2010-ல் அறிவிக்கப்படலாம் என்பதால் இந்தக் கால அவகாசத்தைப் பயன்படுத்தி சர்வதேச பாஸ்போர்ட் பெறுவதற்கு உடன் நடவடிக்கை எடுக்கலாம். மேலும், ஹஜ் 2010—க்கு மனுச் செய்வதற்கு சர்வதேச பாஸ்போர்ட் அவசியம் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும் பட்சத்தில், அதனால் ஏற்படும் இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்கு வாய்ப்பாகவும் அமையும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கா. அலாவுதீன், இ.ஆ.ப.,**
**உறுப்பினர் (ம) செயல் அலுவலர்.**

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை—9.**